யாகும். திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை இந்த அவையில் முன் மொழியவில்லை. அவர் கொடுத்த, நோட்டீஸ் பற்றி நாளை முடிவு கூறுகிறேன் என்றுதான் சொன்னேன். அதை அறையிலேயே தள்ளி விடுவதா அல்லது அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்த பிறகு தள்ளுவதா என்பதெல்லாம் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அந்த வகையில் திரு. மார்ட்டின் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை யின் பொருள் இந்த அவையில் பேசுகின்ற அளவுக்கு முக்கியத்துவம் இல்லாதது என்பதால் வேண்டிய தகவல்களைக் கொடுத்து அறையிலே தள்ளப்பட்டு விட்டது. ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) அமைச்சரின் விளக்க உரை.

தென் ஆற்காடு மாவட்டத்தில் சிரணிக்காக கருவிகள் வாங்கியது குறித்த உள்ளாட்சித் துறை அமைச்சரின் உரை

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்ட்டின் அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு ஒரு அறிக்கையை இந்த மன்றத்திலே கொடுக்க விரும்புகிறேன்.

அரசு ஆணை எண் 279-ன் படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கோட்ட அளவில் எடுத்துக் கொள்ளும் சிரணி வேலைகளுக்காக 6,000 ரூபாய் மதிப்புள்ள கருவிகள் வாங்கிக் கொள்ளலாம் என்ற விதிப்படி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சென்ற நிதி ஆண்டு 1967–68-ல் கருவிகள் வாங்க ஆணை கொடுத்திருந்தார்கள். ஆனால், கருவிகள் அந்த நிதி ஆண்டு முடிவிற்குள் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு 1968–69 செப்டம்பரில்தான் கருவிகள் வழங்கப்பட்டு அதற்கான தொகை யும் இந்த ஆண்டில் பட்டுவாடாச் செய்யப்பட்டிருக்கிறது.

தணிக்கைக் குறிப்பில் தென் ஆற்காடு மாவட்டத்தில் 1967–68-ல் 6,000 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகள் வாங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல.

நிதி ஆண்டு 1968–69-ல் ரூ. 20,000 ரூபாய்க்குக் கருவிகள் வாங்கியது பற்றி தென் ஆற்காடு மாவட்டத் தலைவர் தவறான அறிக்கை கொடுத்ததன் பேரில் 20,000 ரூபாய்க்குக் கருவிகள் வாங்கப்படவில்லை என்று பதில்தர நேரிட்டது. இது பற்றி உடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விளக்கம் கேட்டதற்கு கூற்றம் அளவில் எடுத்துக் கொள்ளும் வேலை களுக்காக கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. ஆனால் முனபு கொடுத்த அறிக்கையில் தவறாகக் கொடுக்கப்பட்டது என்று பதில் கொடுத்திருக்கிறார். தவறான அறிக்கை கொடுத்ததற்காகவும் அதிகப்படியாகக் கருவிகள் வாங்கியதற்காகவும் தென் ஆற்காடு மாவட்டத் தலைவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. விளக்கம் கிடைத்தபின் தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(9) அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க எண் (3) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 9/1969) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கோருகிறேன்.

* **திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்** : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசின் சார்பில் ஒட்டு மொத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நிதி அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். இன்று தமிழ்நாடு பூராவும் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற வறட்சி, பசி, பஞ்சம் என்ற நிலை பற்றி எல்லோராலும் பொதுவாகப் பேசப்பட்டு வருகிறது. அதற்காகப் பஞ்ச நிவாரண வேலைகளை எடுத்துத்